(2022-23-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2)

**SUBJECT CODE 22 PTM 209**

**REG.NO:**

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : மே – 2023**

**எம்.ஏ. தமிழ் இலக்கியம்** **மதிப்பெண்கள் : 50**

**இரண்டாம் பருவம்** **நேரம் : 3 மணி**

## உரைமரபுகள்

### பகுதி – அ (10 x 1 = 10 மதிப்பெண்கள்)

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (மு1)

1. ‘திருக்குறள் பருவத்திலே பெற்ற பிள்ளை’ என்று பாராட்டப்படும் நூல் எது?

   அ) நன்னெறி ஆ) நீதிநெறி விளக்கம் இ) அறநெறிச்சாரம் ஈ) விவேகசிந்தாமணி

2. ‘உரையாசிரியர்’ என்ற சிறப்புப் பெயர் யாரைச் சுட்டும்?

   அ) நச்சினார்க்கினியர் ஆ) பேராசிரியர் இ) சேனாவரையர் ஈ) இளம்பூரணர்

3. தமிழ் இலக்கிய உலகில் பேராசிரியர் என்ற பெயருடன் காணப்படுபவர் எத்தனை பேர்?

   அ) அறுவர் ஆ) எழுவர் இ) ஒன்பதின்மர் ஈ) பதின்மர்

4. நிரம்பையர் காவலன் என்ற பெயர் யாரைக் குறிப்பிடுகிறது?

   அ) கல்லாடர் ஆ) தெய்வச்சிலையார் இ) அடியார்க்குநல்லார் ஈ) பரிமேலழகர்

5. ‘பண்டிதமணி’ என்ற பட்டத்திற்கு உரியவர் யார்?

   அ) பெரியவாச்சான் பிள்ளை ஆ) நச்சினார்க்கினியர் இ) சேனாவரையர் ஈ) கதிரேசச் செட்டியார்

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடை தருக.** (மு2)

6. இறையனார் அகப்பொருள் கூறும் நால்வகை உரைகள் யாவை?
7. இளம்பூரணர் எந்த சமயத்தைச் சார்ந்தவர்?
8. பரிமேலழகரை உரையாசிரிகளுக்குள் இளவரசர் என்று சிறப்பித்த மேனாட்டறிஞர் யார்?
9. நச்சினார்க்கினியர் உரை வகுத்த நூல்கள் இரண்டின் பெயரைச் சுட்டுக.
10. வியாக்கியானச் சக்கரவர்த்தி எனச் சான்றோர்களால் போற்றப்படுபவர் யார்?

### பகுதி – ஆ ( 5 x 3 = 15 மதிப்பெண்கள்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.**

(மு3)

11. அ) உரை வரலாற்றில் செய்யுள் வடிவில் தோன்றிய உரைகளைப் பட்டியலிடுக.

(அல்லது)

   ஆ) பண்டைய உரையாசிரியர்களின் நடை வகைகளை எடுத்துரைக்க.

12. அ) பல்துறை அறிவு உடையவர் இளம்பூரணர் என்பதைச் சான்றுடன் எழுதுக.

(அல்லது)

ஆ) சேனாவரையரின் தருக்கநூல் அறிவை அவர்தம் உரைவழி தெளிவுபடுத்துக.

13. அ) பேராசிரியர் தம் உரையில் நூலாசிரியரைப் போற்றும் தன்மையை எடுத்துரைக்க.

(அல்லது)

ஆ) பரிமேலழகரின் வரலாற்றை எடுத்துரைக்க.

14. அ) அடியார்க்கு நல்லார் பாடவேறுபாடு காட்டும் பாங்கைத் தெளிவுபடுத்துக.

(அல்லது)

ஆ) நச்சினார்க்கினியர் எழுதிய பத்துப்பாட்டு உரைச் சிறப்பைக் குறிப்பிடுக.

15. அ) திருவாசகச் சொற்பொருள்களுக்கு கதிரேசச் செட்டியார் விளக்கம் தருவதைச் சான்றுடன் எழுதுக.

(அல்லது)

ஆ) பெரியவாச்சான் பிள்ளை எழுதிய நூல்கள் யாவை?

## பகுதி – இ ( 5 x 5 = 25 மதிப்பெண்கள்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.**

**(K4 / K5)**

16. அ) உரையின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

ஆ) இலக்கண நூல்கள் கூறும் உரை வகைகளை விவரிக்க.

17. அ) நக்கீரரின் உரைச்சிறப்பை இறையனார் களவியல் உரை வழி விளக்குக.

(அல்லது)

ஆ) இளம்பூரணர் உரையின் வாயிலாக அறியலாகும் உரை மரபுகளைத் தொகுத்தெழுதுக.

18. அ) பேராசிரியர் என்னும் பெயரில் உரையாசிரியர் பலர் இருந்ததைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

ஆ) பரிமேலழகரின் திருக்குறள் உரைத் திறனை விவரிக்க.

19. அ) அடியார்க்கு நல்லாரின் சிலப்பதிகார உரை வளத்தைத் தெளிவுபடுத்துக.

(அல்லது)

ஆ) பத்துப்பாட்டு உரை வாயிலாகப் புலனாகும் நச்சினார்க்கினியரின் உரை நெறிகளை விளக்கி வரைக.

20. அ) கதிரேசச் செட்டியாரின் திருவாசக உரை நயங்களை ஆராய்க.

(அல்லது)

ஆ) பெரியவாச்சான் பிள்ளையின் உரை நயத்தை மதிப்பிடுக.



*****